தோழர் சண் : நினைவு கொள்ளலும் , சண் தாண்டிச்சென்ற சமூக , அரசியல் தடயங்களைப் புரிந்து கொள்ளலும்

Written by - தகவல்: எழுத்தாளர் கற்சுறா -
Thursday, 04 April 2019 21:00 - Last Updated Thursday, 04 April 2019 21:20

"நண்பர் எழுத்தாளர் கற்சுறா அனுப்பியுள்ள நிகழ்வு பற்றிய இவ்வறிவித்தலை 'பதிவுகள்' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம். தேடக அமைப்புடன் இணைந்து இயங்கிய திரு. சண்முகலிங்கன் அவர்கள் இலங்கையில் இருந்த காலத்தில் காந்தியம் அமைப்புடன் இணைந்து இயங்கிய சமூக, அரசியற் செயற்பாட்டாளர்; தன்னார்வத்தொண்டர். அதன் காரணமாகவே சிறைவாசம் அனுபவித்தவர். அவரைச் சந்திக்கும் வேளைகளிலெல்லாம் அவரது அனுபவங்களைப் பதிவு செய்யும்படி கூறுவேன். சிரித்தபடியே செய்யவேண்டும். 'பதிவுகள்' இணைய இதழில் பிரசுரிப்பதற்காக எழுதித்தருகின்றேன் என்று கூறுவார். அது நிறைவேறாமலே போனாலும் காலம் அவரை மறந்துவிடவில்லை என்பதற்குச் சான்று இந்நிகழ்வு. இந்நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ள அவரது நண்பர்களுக்கு வாழ்த்துகள்.

சண்முகலிங்கம் அவர்களை நினைத்தால் அவரது சிரித்த முகமும், 'கிரிதரன்' என்று வாஞ்சையுடன் அழைக்கும் குரலுமே எப்பொழுதும் நினைவுக்கு வரும். ஒரு காலகட்டத்துக்குரிய வரலாற்றுப் பங்களிப்பைச் செய்த இவரைப்போன்றவர்களை வரலாறு ஒருபோதும் மறந்துவிடுவதில்லை."

- வ.ந.கி -

தோழர் சண்

சண்முகலிங்கம் பொன்னம்பலம் "தோழர் சண்"

6ம் ஆண்டில் நினைவு கொள்ளலும்
சண் தாண்டிச் சென்ற சமூக அரசியல்
தடயங்களைப் புரிந்து கொள்ளலும்

எமக்குத் தெரியும் கைவிடப்பட முடியாத மனிதர்களை நமது சமூகம் கைவிட்டே வந்திருக்கிறது.

சண் குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள
அனைத்துத் தோழமைகளையும்
அன்புடன் அழைக்கிறோம்

07 ஏப்ரல், மாலை 5 மணி

இடம்:
2537 pharmacy ave
Scarborough
CANADA

மேலதிக விபரங்கள் அறிய:
Nesan: 416-5733440
Katsura: 416-6151079

கனடா நண்பர்கள்

1 / 1